எளிதாக இருக்கும். அதேநேரத்தில் காலதாமதம் இல்லாமல் விரைவாகவும் செய்ய முடியும் என்ற அடிப்படையில்தான் பலவற்றை நாம் கழகத்தின் மூலமாகச் செய்கிறோம். கடன் வசதி, மற்ற பிற வசதிகளைப் பெறுவது கூட கழகம் என்றால் சுலபமாகக் கிடைக்கிறது. துறையின் மூலம் என்றால், சுற்றாணைகள் மூலம் ஆணை பெறுவதில், சட்டமன்றத்திறகு வந்து நிதி ஒதுக்கீடு செய்வதில், நிதி பெறுவதில் காலதாமதம் ஏற்படும். இந்த காலதாமதத்தை தவிர்க்கவும், நிதி வசதிகளை எளிதில் பெறவும் இப்படிப்பட்ட கார்ப்பரேஷன்கள் அமைக்கப்படுகின்றன. இந்த குறிப்பிட்ட கார்ப்பரேஷனைப் பொறுத்தமட்டில் உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியமாதிரி குறைபாடுகள் இருந்தால், அந்த குறைபாடுகளைக் கண்டறிந்து, அவைகளை நீக்க முயற்சி செய்யலாம். ஆனால் கார்ப்பரேஷனாக இருப்பதை மீண்டும் துறைக்கு மாற்றுவது என்பது சரியல்ல.

[முற்பகல் 9-10]

இப்போது நானே ஒன்றை எண்ணிக்கொண்டிருந்தேன். அதாவது எல்லோரும் இவ்வாறு வற்புறுத்துவதன் காரணமாக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து மிக விரைவில் அதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அந்தக் குறைபாடுகளை உடனடியாக நீக்குவதற்கும் படகு கட்டும் துறையைப் பொறுத்த வரையில் அதைச் செம்மையாக நடத்துவதற்கும் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்காத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். விரைவில் அதுபற்றிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடைப்பாடி நகரில் 'மீன்வளம்' பெருக்குத் திட்டம்

* வினா எண். 79 —திரு. இ. கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரிலுள்ள பெரிய ஏரியில் 'மீன்வளம்' பெருக்கத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரிலுள்ள பெரிய ஏரியில் 'மீன்வளம்' பெருக்கும் திட்டம் மீனளத் துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இ. கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற ஏரிகளிலே மீன் வளத்தைப் பெருக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அந்தப் பகுதியில் மீன் பிடிக்கும் ஜாதியினர் சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் பயன் பெறுவார்கள். ஆகவே அந்த ஏரிகளும் மீன் வளர்க்கும் திட்டத்திலே சேர்த்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு மீன்வளத்துறை பெரிய நீர்த்தேக்கங்களில்தான் மீன் வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. அரசுடமையாக்கப்பட்ட பெரும் நீர்ப்பாசன குளங்களில் மீனளத்துறையின் மூலம் மீன் குஞ்சுகள் விடப்பட்டு வளர்க்கப்படுகின்றன. அவைகளில் உள்ள மீன்களை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றது. அதாவது வருவாய்த் துறை, பொதுப்பணித்துறை, ஊராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த உள்நாட்டு குளங்களில் உள்ள மீன்களைப் பொறுத்தவரையில் அது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றன. அப்படி மீனவர் கூட்டுறவுச்சங்கங்களில் இருந்து யாரும் குத்தகை எடுக்க வரவில்லை என்றால் பொது ஏலத்தில் விடப்படுகின்றது. ஆகவே மீனவர் கூட்டுறச் சங்கங்கள்தான் அவற்றை குத்தகைக்கு எடுத்து அதைப் பயன்படுத்த முன்வரவேண்டும். அவ்வாறு அந்த சங்கங்கள் முயற்சிகளைச் செய்ய முன்வருமேயானால் மீனளத்துறை போதுமான அளவு உதவி செய்ய முன்வரும்.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஏரிகளில் மீன் வளர்க்கின்ற திட்டங்களைப் பொறுத்த வரையில் அரசு மீன்வளத் துறையின் மூலமாக அதை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ஊராட்சி ஒன்றியங்கள் தனிப்பட்ட முறையிலே அவற்றை சரியாக நிர்வகிக்க முடியாத காரணத்தால் மீன்வளத் துறையின் மூலமே அதை எடுத்துக் கொண்டு அந்த ஏற்பாட்டை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றை ஏற்று நடத்த வேண்டும் என்ற வகையிலேதான் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவைகள் எல்லாம் உதவியாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் அவர்கள் குத்தகைக்கு எடுக்கவேண்டும் என்று சொல்லப் படுகின்றது. மீனவர் கூட்டுறவு சங்கத்தினர் எடுக்க வராத சமயத்திலேதான் மற்றவர்களுக்குத் தரவேண்டும். ஆகவே மீனவர் கூட்டுறவு சங்கத்தினர் அதைக் குத்தகைக்கு எடுக்க முன்வரவேண்டும். அவர்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்கத்தான் இவ்வாறு ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அவர்களுக்கு

1980 ஜூலை 31]

குத்தகைக்கு விடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீன் வளத்தைப் பெருக்குவதற்கென, முயற்சிகளில் ஈடுபடுவதுதான் நலன் பயப்பதாக அமையும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் ; தலைவரவர்களே, இடைப்பாடி பகுதியில் மீன் வளர்க்கின்ற திட்டம் புதிதாக எதுவும் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த காலங்களில் பல ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்களுக்கு அதிகமான பணம் செலவு செய்யப்பட்டு சிமெண்ட் தரைகள் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் பயன்படுத்தப்படாமல் வீணே கிடக்கின்றன. ஆகவே மீண்டும் அந்தக் குளங்களை நல்ல முறையில் செப்பனிட்டு அதிலே மீன் வளர்ப்பு திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் தரப்படும்.

அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயம், வாணியம்பாடி.

*வினா எண். 80— திரு. இரா. தாமரைக்கனி ; மாண்புமிகு செய்தி–அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயத் திருப்பணி செய்யும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) & (ஆ) வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் கோயிலுக்குத் திருப்பணி செய்யும் பொருட்டு திருப்பணிக்குழு அமைக்க வேலூர் உதவி ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தாலே அடுத்த ஆண்டில் நிச்சயமாக திருப்பணி நடைபெற்று விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயம் மட்டுமல்லாமல், மற்ற தமிழக கோவில்கள் அனைத்திலும், திருப்பணி செய்கிற நேரத்தில் பெரும்பாலான மக்கள் செல்கிற இடம் என்ற கருத்தை மனத்தில்